# 3. சங்க கால பொருளாதாரம் (Economic Conditions – Trade and Commerce)

சங்ககால மக்களிடம் மூன்று வகை பொருளாதார வாழ்க்கை இருந்தது. அவைகள் வமிசாவளி உற்பத்தி முறை (Lineage Production) சிறு பொருள் உற்பத்தி (Petty Commodity Economy) மற்றும் சந்தைப் பொருளாதார முறை (Market Economy) போன்றவைகளாகும்.

**வமிசாவளி உற்பத்தி முறை** (Lineage Production)

வமிசாவளி உற்பத்தி முறையில் "ஒரே வமிசத்தைச்" சேர்ந்த குடும்பங்கள் ஒன்று சேர்ந்து உற்பத்தி செய்தன. இவர்களுக்கு ஒரு "தலைவர்" இருந்தார். தலைவர் கட்டுப்பாட்டின் கீழ் எல்லோரும் ஒன்றாக பாடுபட்டனர். தலைவர் உற்பத்தியான பொருளை எல்லோருக்கும் பிகிர்ந்து கொடுத்தார். இந்த குடும்பங்கள் தங்களுக்குத் தேவைக்கதிகமான பொருட்களை விற்பனை செய்து கொண்டனர். இந்த வமிசாவளி உற்பத்தி முறை, சங்க காலத்தில் நிலவியிருந்த குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்துவகை நிலங்களிலும் இருந்தது.

**குறிஞ்சி நிலப் பொருளாதாரம்**

குறிஞ்சி என்பது மயலயம் மலைசார்ந்த பகுதியுமாகும். இங்கு வாழ்ந்த மக்கள் குறவர்களாவர். இவர்கள் மூன்று தொழில் மூலம் பொருளை உற்பத்தி செய்தனர். இவர்கள் காடுகளை தீ வைத்து எரித்து விவசாய நிலமாக மாற்றினர். முள்ளம் பன்றி தன் கொம்பில் கீறிச் சென்றதை உழவாக கருதினர். அதன்மேல் விதை விதைத்தனர்.

நீரை சேமித்து வைக்கத் தெரியாமல் மழை பெய்யும் போதே விதை விதைத்தனர். இவர்கள் "தினை" ஜவனம் என்னும் நெல்லைப் பயிர் செய்தனர். தினையை அறுத்தபிறகு அந்த இடத்தில் "அவரை, மொச்சை, போன்ற பருப்பு வகைகளைப் பயிர் செய்தனர்.

**வேட்டையாடுதல்**

இவர்கள் வேட்டையாட அம்மையும், வில்லையும் பயன்படுத்தினர். வேட்டை நாய்களை வைத்திருந்தனர்: இவர்கள் வில்லை இடது கையில் பிடித்திருந்தனர். யானையை வேட்டையாடி தந்தம் எடுத்தனர் முள்ளம் பன்றியை வேட்டையாடினர். தலைவி அதை எல்லோருக்கும் பங்கு போட்டுக் கொடுத்தாள்.

**மது தயாரித்தல் மற்றும் பல தொழில்கள்**

இவர்கள் பலவகை மதுக்களை தயாரித்தனர். பலாப்பழத்திலிருந்தும், மாம்பழத்திலிருந்தும், தேனிலிருந்தும் தனி தனியாக மதுவைத் தயார் செய்தனர். இந்த மூன்றையும் ஒன்று சேர்த்தும் மது தயார் செய்தனர். யானைத் தந்தத்தால் பூமியை தோண்டி தங்கம் மற்றும் விலை உயர்ந்த கல் மணிகளை எடுத்தனர். மேலும் இவர்கள் எறும்பு பிற்றுக்களை தோண்டி தானியங்களைச் சேகரித்தனர்.

**முல்லை நிலப் பொருளாதாரம்**

முல்லை என்பது காடும் காடு சார்ந்த பகுதியாகும். இதில் வாழ்ந்த மக்கள் "இடையர்கள்" அல்லது "கோவலர்களாவர்".

### ஆடு மாடு மேய்த்தல்

இவர்கள் மாடு, எருமைகளை விரட்டிக் கொண்டு காட்டிற்குச் சென்றனர். மாலை நேரத்தில் வீடு திரும்பினர். தீயை உண்டாக்கி கால் நடைகளைப் பாதுகாத்தனர். இவர்கள் கையில் எப்போதும் ஒரு கோலும் கக்கத்தில் தோல் பையும், முதுகில் ஓலையும் இருந்தது. இவர்கள் தோலால் ஆன படுக்கையில் தான் படுத்தனர். இசைக் கருவி ஊதி மகிழ்ந்தனர். கன்று குட்டிகள், ஓநாய்கள் கடிக்க வந்தால் சப்தமாக விசில் அடித்து விரட்டினர்.

### பால் பொருட்கள்

இவர்கள் பாலிலிருந்து தயிர், மோர், வெண்ணெய், நெய் போன்றவைகளை உற்பத்தி செய்தனர். இதை விற்று நெல் வாங்கினார்.

### பொருளாதாரம்

இவர்கள் மாட்டை முக்கிய செல்வமாக கருதினார். நெய்க்கு விலையாக கட்டிப் பொன் கொடுத்தாலும் வாங்காமல், எருமை, பசுவைத்தான் வாங்கினார்கள். இவர்கள் ஆட்டுப்பாலை வீட்டில் கொடுத்து விட்டு வீடுகளிலிருந்த "கூழை" வாங்கிச் சென்றனர். மதுரைப் பகுதியிலும் கொங்குப் பகுதியிலும் இவர்கள் அதிகமாக வாழ்ந்தனர்.

### மருதநிலப் பொருளாதாரம்

### விவசாயம்

ஆறும் ஆறுசார்ந்த பகுதி மருத நிலமாகும். இங்கு வாழ்ந்த மக்கள் உழவர்களாவர். இவர்கள் விவசாயத் தொழிலை செய்தனர். இங்கு விவசாயம் குறிஞ்சி நிலத்தை விட நன்றாக முன்னேறியிருந்தது.

மக்கள் இரும்பால் செய்த கலப்பையில் உழுதனர். எருமை மாடுகளைப் பூட்டி, கலப்பையின் "கொழு" நிலத்தில் மறையும் படி ஆழமாக உழுதனர். நெல்லை விதைக்காமல் நன்றாக பயிர் செய்தனர். பயிரை அறுத்த பின்பு, அது ஈரமுள்ள போதே உழுதனர். அது மறுகால் உழுதல் என்றழைக்கப்பட்டது.

**நீர்பாசனமும் - பயிர் வகைகளும்**

நிலத்தை மென்புலம் "வன்புலம்" என்று இரண்டாகப் பிரித்தனர். மென்புலம் என்பது நீர்வளம் நிறைந்த நிலமாகவும், வண்புலம் என்பது நீர் இல்லாமல் வானம் பார்த்த பூமியாகும். இவர்கள் ஆறுகள் மூலமும், குளங்கள் மூலமும் நீர் பாய்ச்சினர். வரிசையாக நின்று மட்டைகளால் வயலுக்கு நீரை இறைத்தார்கள்.

குளத்துக்கு கீழேயே நெல்லைப் பயிர் செய்யும் பழக்கமிருந்தது. வெண்ணெய், செந்நெல் என்ற இரண்டு நெல்வகைகளை விதைத்தனர். நன் செய் நிலங்களில் நெல்லை அறுத்து முடித்தவுடன் மறுமுறை நெல் பயிரிடும் வரையில் உளுந்து போன்ற பயறு வகைகளை விதைத்தனர். பருத்தியைப் பயிர் செய்தனர். இவர்கள் உழுவதற்குப் பயன்படுத்திய கருவிகள் கலப்பை, உருளை கொடுப்பு போன்றவைகளாகும்.

**நெய்தல் நிலப் பொருளாதாரம்**

கடலும் கடல் சார்ந்த பகுதி நெய்தலாகும். இங்கு வாழ்ந்த மக்கள் "பரதவர்" களாவர். இவர்கள் "மீன் பிடித்தலையும்" "முத்து குளித்தலையும்" முக்கியத் தொழிலாகச் செய்தனர்.

**மீன்பிடித்தல்**

நெய்தல் நில மக்கள் மீன்களைப் பிடிக்க தூண்டடில்கள், வலைகள் கூர்மையான உளிகளைப் பயன்படுத்தினர். வகைகளை நூலினாலும் நாரினாலும், தாங்களேப் பின்னிக் கொண்டனர். மீனைப் பனை ஓலைப்பை ஒன்றில் போட்டு வைத்துக் கொண்டனர்.

மீன்பிடிக்க கட்டு மரங்களிலும் படகுகளிலும் சென்றனர். அந்த படகு "திமில்" என்றும் "அம்பி" என்றும் அழைக்கப்பட்டது. இவர்கள் மீன் பிடிக்க நடு இரவில் கூட்டம் கூட்டமாகச் சென்றனர். தலைவன் தான் பிடித்த அயிரை மீனை மற்றவர்களுக்குப் பிரித்து கொடுத்தனர்.

**மீன் வகைப் பொருட்கள்:**

மீனை நெய்தல் நிலமக்கள் மூன்று வகைகளில் பயன்படுத்தினர். 1. மீன் அவர்களுக்கு முக்கிய உணவாகும். 2. மீனைக் கொடுத்துத் தானியத்தைப் பெற்றனர். 3. மீனிலிருந்துப் பல பொருட்களைத் தயாரித்தனர். மீனிலிருந்து எண்ணெய் எடுத்தனர். மீன்களில் உப்பு போட்டு காய வைத்து கருவாடாக்கினார். கருவாட்டைத் துண்டு துண்டாக அறுத்து உப்புக் கண்டம் போட்டனர். மீன் எண்ணெயை விளக்கெரிக்க பயன்படுத்தினர். மேலும் இவர்கள் உப்பங் கழிகளை ஏற்படுத்தி கடல் நீரைப் பாய்ச்சி ஆவியாக்கி உப்பு தயாரித்தனர்.